**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்**

**சட்டக்கற்கைகள் திணைக்களம்**

**சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - மட்டம் 4**

**ஒப்பந்தச்சட்டம் - LWU2311/LLU4805**

**இறுதிப்பரீட்சை – 2020/2021**

**காலம் : 03 மணித்தியாலங்கள்**

---

திகதி : **12 செப்டெம்பர் 2021** நேரம்: **மு.ப 9.30 – பி.ப 12.30 வரை**

---

**பொது அறிவுறுத்தல்கள்**

வினாப்பத்திரமானது **இரு (02)** பகுதிகளை உள்ளடக்கியுள்ளதுடன் **ஆறு (06)** வினாக்களைக் கொண்டுள்ளது. **பகுதி ஒன்றானது (1)** இரண்டு (02) வினாக்களையும் பகுதி **இரண்டானது (11)** நான்கு (04) வினாக்களையும் உள்ளடக்கியுள்ளது.

**பகுதி ஒன்றிலிருந்து (1) ஒரு (01) வினாவை மட்டும்** தெரிவு செய்து மொத்தமாக **நான்கு (04) வினாக்களிற்கு** விடையளிக்குக.

ஒவ்வொரு வினாவிற்கும் **25 புள்ளிகள்** ஒதுக்கப்பட்டுள்ளது.

---

## பகுதி 1

---

**பகுதி ஒன்றிற்கான விஷேட அறிவுறுத்தல்கள்**

பகுதி **ஒன்றிலிருந்து ஒரு (01) வினாவை மாத்திரம்** நீங்கள் தெரிவுசெய்ய முடியும்

---

1. குசல் என்பவன் காட்சி மற்றும் நிகழ்த்து கலைகள் பல்கலைக்கழகத்தின் (University of Visual and Performing Arts) இரண்டாம் வருட மாணவனாவான். அவனது குடும்பத்தினரால் அவனது கல்விக்கான செலவினை வழங்குவதற்கான வசதி இல்லாத காரணத்தால் அவன் தனது ஓய்வு நேரங்களில் ஓவியங்களை வரைவதுடன் அவற்றினை விற்பனை செய்கின்றான். தன்னுடைய ஓவியங்களை விற்பனை செய்வதற்காகத் தனுக்ஷ என்பவனை குசல் நியமித்தான். எந்தச் சூழ்நிலைகளிலும் குறித்த ஓவியங்களை ரூபா.25,000 ற்குக் குறைவாக விற்பனை செய்ய வேண்டாம் என குசல் தனுக்ஷவிடம் கூறினான். எனினும் குறித்த ஓவியத்தில் இருந்து குறைந்தது ரூபா.35,000 ஈட்டமுடியுமென குசல் நம்பினான்.

பின்வரும் ஒவ்வொரு மாறுபாடான சூழ்நிலைகளிலும் குறித்த தரப்பினரின் பொறுப்புடைமை பற்றி விளக்குக. தீரப்புச் சட்ட விளக்கங்களால் உமது விடையை ஆதரிக்குக.

அ) தனுக்ஷ குறித்த ஓவியத்தினை தனுயா என்பவளுக்கு ரூபா.15,000 ற்கு விற்பனை செய்தான்.

**(12 புள்ளிகள்)**

ஆ) தனுக்ஷ குறித்த ஓவியத்தினை தனது சொந்தக் கணக்கில் ரூபா. 25,000 ற்கு வாங்கியதுடன் பின்னர் அதனைச் சமன் என்பவனுக்கு ரூபா. 30,000 ற்கு விற்பனை செய்தான்.

**(13 புள்ளிகள்)**

2. ஷனி என்பவள் காப்புறுதி முகவரொருவனான நளின் என்பவனை அழைத்து தனது ஆண் நண்பனான அஷானின் அதிசொகுசு வாகனத்தினை விரைவில் காப்பீடு செய்யக் கோரினாள். நளின் அதன்படி ஆரம்ப நடைவடிக்கைகளை மேற்கொண்டான். அதே சமயம் அஷானும் மற்றொரு முகவரான அங்கி என்பவனைத் தொடர்பு கொண்டதுடன் அங்கியின் கம்பனியில் தனது வாகனத்தினைக் காப்பீடு செய்ய இணங்கினான். ஒரு வாரம் கழித்து குறித்தவிடயம் ஷனிக்கு தெரிந்தவுடன் அவள் நளினை அழைத்து நளினின் கம்பனியில் குறித்த வாகனம் காப்பீடு செய்யப்படும் என்பதனை உறுதிப்படுத்தினாள்.

அ) ஷனி மற்றும் அஷான் என்போருக்கு எதிராக முதல்வர்களாகக் கடமைகளை மீறினார்கள் எனும் அடிப்படையில் வழக்கொன்றினைத் தாக்கல் செய்வதற்கு நளின் விரும்புகின்றான். இவ் வழக்கானது எந்த அளவிற்கு வெற்றி பெறும்? உமது விடையைப் பொருத்தமான நியதிச்சட்ட ஏற்பாடுகள், தீர்ப்புச் சட்டங்கள் ஏதுமிருப்பின் அவற்றினால் ஆதாரப்படுத்துக.

**(13 புள்ளிகள்)**

ஆ) அஷான் மற்றும் ஷனி தமக்கு கிடைக்கக்கூடிய பாதுகாப்புகள் அல்லது பரிகாரங்கள் யாவையென உமது ஆலோசனையை நாடுகின்றார்கள். அலோசனை வழங்கவும்.

**(12 புள்ளிகள்)**

---

## பகுதி 11

**பகுதி <u>இரண்டிலிருந்து (02) மூன்று (03) வினாக்களை மாத்திரம்</u> தெரிவுசெய்ய முடியும்**

---

**பகுதி இரண்டிற்கான (11) விஷேட அறிவுறுத்தல்கள்**

நீங்கள் கிங்ஸ்லாந்தில் அமைந்துள்ள மில்டன் பல்கலைக்கழகத்தின் புதிதாக நியமிக்கப்பட்ட சட்ட அதிகாரி. மில்டன் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், பின்வரும் ஒப்பந்தக் பொறுப்புக்கள் தொடர்பான சட்டப்பிரட்சனைகள் குறித்து ஆலோசனைக் குறிப்பொன்றினை வரையுமாறு உங்களைக் கேட்டுள்ளார்.

கிங்ஸ்லாந்தின் சட்டமானது இலங்கையின் சட்டத்தினை ஒத்ததெனக் கருதுக. ஒவ்வொரு சட்டப்பிரச்சனை தொடர்பாகவும் பொருத்தமான தீர்ப்புச்சட்டம் மற்றும் நியதிச்சட்ட ஏற்பாடுகளை (ஏதேனுமிருப்பின்) மேற்கோள்காட்ட நீங்கள் வேண்டப்படுகின்றீர்கள்.

---

**வினாக்கள் 03 மற்றும் 04 ஆகியவை பின்வரும் நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டவை.**

மில்டன் பல்கலைக்கழகத்தின் கிரியேட்டிவ் இண்டஸ்ரீஸ் பீடமானது (The Faculty of Creative Industries) கிங்ஸ்லாந்தின் நாட்டுப்புறப்பாடல்களை ஊக்குவிப்பதற்காக மூன்று நாள் இசை நிகழ்ச்சியை நடாத்த விரும்பியது. எட்டி என்பவன் கிங்ஸ்லாந்தின் பிரபல்ய பாடகன் என்பதுடன் நவீன இசைத்துறையில் நாட்டுப்புறப்பாடல்களைப் பயன்படுத்துபவனாக விளங்கினான். குறித்த நிகழ்ச்சியில் ஆகஸ்ட் முதலாம் திகதியிலிருந்து மூன்றாம் திகதிவரை மூன்று மாலை நிகழ்ச்சிகளில் பாடுவதற்காக எட்டியை அழைப்பதற்கான கடிதமொன்றானது கிரியேட்டிவ் இண்டஸ்ரீஸ் பீடத்தின் உதவிப் பதிவாளரால் 2021ம் ஆண்டு ஜனவரி மாதம் முதாலாம் திகதியன்று அனுப்பப்பட்டது. குறித்த அழைப்பானது ரூபா. 600,000 கொடுப்பனவாகவும் மற்றும் நிகழ்சியின் கடைசி நாளைத் தொலைக்காட்சியில் ஒளிபரப்புவதிலிருந்து கிடைக்கப்பெறும் வருமானத்தில் 10% பகுதியினையும் முன்மொழிந்தது. அந்நிகழ்வில் பங்கேற்பதில் அவனுக்கு மகிழ்சியெனவும் எனினும் அவன் ஆகஸ்ட் 2 மற்றும் 3 ஆம் திகதிகளில் மாத்திரமே தான் பங்கேற்க்க முடியுமெனவும் கடிதமொன்றின் மூலம் எட்டி 2021ம் ஆண்டு ஜனவரி 5ம் திகதியன்று பதிலளித்தான். அவன் குறித்த நிகழ்வின் இறுதி இரண்டு நாட்களிலும் பங்கேற்பதில் மகிழ்ச்சியெனவும் மற்றும் முதல்நாள் அன்று அதாவது ஆகஸ்ட் 1ம் திகதியன்று நிகழ்வில் பாடுவதற்கு வேறொருவரை அவர்கள் தேடுவதாகவும் பரிந்துரைசெய்து ஜனவரி 10ம் திகதியன்று உதவிப் பதிவாளர் கடிதமொன்றினை எட்டிக்கு அனுப்பினார். எட்டி 'குறித்த ஏற்பாட்டில் எனக்கு மகிழ்ச்சி' எனக் குறிப்பிட்டுக் கடிதமொன்றின் மூலம் ஜனவரி 13ம் திகதியன்று பதிலளித்தான். ஜனவரி 16ம் திகதியன்று ABC விளம்பரக்கம்பனிக்கு ரூபா.100,000 மொத்தத் தொகையைச் செலுத்தி நாட்டுப்புறப்பாடல்கள் நிகழ்ச்சிக்கான விளம்பரப் பிரச்சாரமொன்றினை உதவிப் பதிவாளர் ஆரம்பித்தார். பெப்ரவரி 1ம் திகதியன்று எட்டி, தான் தனது எண்ணத்தினை மாற்றிவிட்டதாகவும் தனது அடுத்த பாடல் தொகுப்பிற்கான வேலைகளில் ஈடுபடுவது தனக்கு மிகவும் அசியமானதென்று முடிவுசெய்துள்ளாரெனவும் தெரிவித்துக் கடிதமொன்றினை உதவிப் பதிவாளருக்கு அனுப்பினான்.

3. மில்டன் பல்கலைக்கழகமானது எட்டியுடன் பிணிக்கும் ஒப்பந்தமொன்றினை நிறைவேற்றியுள்ளதா என்பது தொடர்பில் உமது ஆலோசனையைத் துணைவேந்தர் நாடுகின்றார்.

உமது ஆலோசனையைத் தயாரிக்கவும்.

**(25 புள்ளிகள்)**

4. மேற்கண்ட நிகழ்வுகள் தொடர்பாகப் பின்வரும் சூழ்நிலைகளை அனுமானித்து ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கும் உமது ஆலோசனையைத் தயாரிக்குக.

அ. கடிதங்கள் பரிமாற்றப்பட்ட நேரத்தில் எட்டியென்பவன் 17 வயதானவனாயின் அது என்ன வேறுபாடுபாட்டினை , ஏதாவது இருப்பின், செய்திருக்கும்?

**(7.5 புள்ளிகள்)**

ஆ. கடிதங்கள் பரிமாற்றப்பட்ட நேரத்தில் கிங்ஸ்லாந்தின் பாரம்பரிய அறிவுப் பாதுகாப்புச்சட்டத்தின் கீழ் நாட்டுப்புறப்பாடல்களின் பொதுவெளி ஆற்றுகையானது தடுக்கப்பட்டது எனில் அது என்ன வேறுபாடுபாட்டினை ,ஏதாவது இருப்பின், செய்திருக்கும்?

**(7.5 புள்ளிகள்)**

இ. குறித்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு எட்டியைத் தூண்டுவதற்காக நிகழ்சியின் கடைசி நாளினைத் தொலைக்காட்சியில் ஒளிபரப்புவதிலிருந்து கிடைக்கப்பெறும் வருமானத்தில் 10% பகுதியினை வழங்குவதாக பொய்யானதொரு கூற்றினை உதவிப்பதிவாளர் மேற்கொண்டாராயின் அது என்ன வேறுபாடுபாட்டினை ,ஏதாவது இருப்பின், செய்திருக்கும்? குறித்த கூற்றினை உதவிப் பதிவாளர் கவனயீனமாக மேற்கொண்டாராயின் உமது ஆலோசனையில் மாற்றம் ஏற்படுமா?

**(10 புள்ளிகள்)**

**வினாக்கள் 05 மற்றும் 06 ஆகியவை பின்வரும் நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டவை.**

மில்டன் பல்கலைக்கழகமானது, 2019ம் ஆண்டு யூலை மாதம் 30ம் திகதி பல்கலைக்கழகத்திற்கு அரங்கமொன்றினைக் கட்டுவதற்காகச் சவுத் பாங்க் கென்ஸ்ரக்ஸனுடன் (South Bank Constructions) ஒப்பந்தமொற்றில் கைச்சாத்திட்டது. குறித்த ஒப்பந்தத்தின் வாசகம் 5ந்தின் பிரகாரம் சவுத் பாங்க் கென்ஸ்ரக்ஸனானது 2021ம் ஆண்டு யூன் மாதம் 30ம் திகதிக்கு முன்னராக குறித்த அரங்கத்தின் கட்டுமானத்தினை முடிக்கவேண்டும். எனினும் சவுத் பாங்க் கென்ஸ்ரக்ஸனால் குறித்த அரங்கத்தின் கட்டுமானத்தினை உரிய திகதிக்கு முன்னராக முடிக்கமுடியவில்லை. உரிய திகதிக்கு முன்னராக அரங்கத்தின் கட்டுமானத்தினை முடிக்கத் தவறியதனால் குறித்த ஒப்பந்தத்தினை அவர்கள் மீறியுள்ளதாகக் குற்றம் சாட்டி அதனால் குறித்த ஒப்பந்தத்தின் 5ம் வாசகத்தின் படி குறித்த கம்பனியானது தீர்க்கமான தொகைச் சேதங்களைச் செலுத்தவேண்டுமெனக் கோரி மில்டன் பல்கலைக்கழகத்தின் முன்னைய சட்ட அலுவலரால் கோரிக்கைக் கடிதமொன்று சவுத் பாங்க் கென்ஸ்ரக்ஸனுக்கு அனுப்பப்பட்டது. குறித்த கோரிக்கைக் கடிதத்திற்குப் பதிலளிக்கும் முகமாக தங்களால் குறித்த அரங்கத்தின் கட்டுமானத்தினை ஏன் உரிய நேரத்தில் முடிக்கமுடியவில்லை என்பதற்குப் பின்வரும் காரணங்கள் சவுத் பாங்க் கென்ஸ்ரக்ஸனின் சட்ட பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்டது.

*கோவிட் 19 மூன்றாவது அலையினால் மில்டன் பல்கலைக்கழகத்தின் அரங்கக் கட்டுமானமானது மோசமாகப் பாதிக்கப்பட்டது. மேலும் 2021ம் ஆண்டு ஏப்பிரல் மாத*

*முடிவுப்பகுதியில் கிங்ஸ்லாந்தின் அரசினால் அமுல்படுத்தப்பட்ட போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் மற்றும் சுகாதார வழிகாட்டிகளினால் கட்டுமான தளத்தில் தேவையான பணியாளர்களை அமர்த்தவோ கட்டுமானத்தினைத் தொடரத் தேவையான பொருட்களை வழங்கவோ எங்களால முடியவில்லை. அதனால் ஒப்பந்தத்தின் வாசகம் 7.5 இன் படி நாங்கள் எந்தவிதமான சேதங்களையும் செலுத்த வேண்டியதில்லை. குறித்த ஒப்பந்தத்தின் வாசகம் 7.5 ஆனது பின்வருமாறு கூறுகின்றது :*

*7.5. வலுகட்டாய நிலை*

*7.5.1 வரைவிலக்கணம்* — *குறித்த ஒப்பந்தத்தின் தேவைப்பாடுகளுக்காக , 'வலுகட்டாய நிலை' எனப்படுவது கட்சிக்காரரொருவரின் நியாயமான கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட நிகழ்வொன்றாகும் அத்துடன் குறித்த ஒப்பந்தத்தின் கீழான கட்சிக்காரரொருவரின் கடமைகளை நிறைவேற்றுவதைச் சாத்தியமற்றதாக்கும் அல்லது குறித்த சூழ்நிலைகளின் கீழ் சாத்தியமற்றதாகக் கருதப்படும் அளவுக்கு நடைமுறைக்கு மாறானது.*

*7.5.2 ஒப்பந்த மீறலற்றது* — *குறித்த ஒப்பந்தத்தின் கீழ் அதனுடைய ஏதேனும் கடமைகளை கட்சிக்காரர் நிறைவேற்றத் தவறுவது குறித்த ஒப்பந்தத்திக் கீழான மீறலாகவோ அல்லது தவறாகவோ கருதப்பட மாட்டாது , அத்தகைய இயலாமையானது 'வலுகட்டாய நிலை' நிகழ்வொன்றிலிருந்து இருந்து...*

05. மில்டன் பல்கலைக்கழகம் மற்றும் சவுத் பாங்க் கென்ஸ்ரக்ஸனுக்கு இடையிலான ஒப்பந்தத்தினை முடிவுறுத்துவது தொடர்பான பின்வரும் வினாக்களிற்குத் துணை வேந்தர் உம்முடைய ஆலோசனையை நாடுகின்றார்.

அ) குறித்த ஒப்பந்தத்திலுள்ள 'வலுகட்டாய நிலை' வாசகத்தினை குறிப்பிட்டு சவுத் பாங்க் கென்ஸ்ரக்ஸன் மேற்கொண்ட கோரிக்கையில் சாதகமான நிலைமை ஏதுமுள்ளதா?

**(15 புள்ளிகள்)**

ஆ) ஒப்பந்தத்தினை முடிவுறுத்தக் கட்சிக்காரர்களுக்கு உள்ள பொதுவான வேறு வழிகள் என்ன?

**(10 புள்ளிகள்)**

6. ஒப்பந்த வாசகங்கள் தொடர்பான பின்வரும் வினாக்களுக்குத் துணைவேந்தர் உமது ஆலோசனையை நாடுகின்றார்.

அ) ஒப்பந்தமொன்றின் நிபந்தனையிலிருந்து உத்தரவாதங்கள் எவ்வாறு மற்றும் எவ்வளவு தூரம் வேறுபடும்?

**(10 புள்ளிகள்)**

ஆ) குறித்த ஒப்பந்தத்தின் பின்வரும் வாசகமானது, சவுத் பாங்க் கென்ஸ்ரக்ஸனின் செய்யாமை மற்றும் கவனயீனமான செயல்கள் காரணமாக ஏற்பட்ட ஏதாவது சேதங்கள் தொடர்பான வழக்குகள் உட்பட சவுத் பாங்க் கென்ஸ்ரக்ஸனின் ஒரு மில்லியன் ரூபாவினைத் தாண்டிய பொறுப்புடைமையை விலக்குகின்றதா?

| | |
|---|---|
| *11.1 விலக்களிப்பு வாசகம்* | *ஒப்பந்தம் அல்லது தீங்கியலாக இருந்தாலும், ஏதேனும் சேதம் அல்லது இழப்பீடு எதுவாக இருந்தாலும், அனைத்து நேரடி அல்லது விளைவு இழப்பு உட்பட்ட எமது (சவுத் பாங்க் கென்ஸ்ரக்ஸன்ஸ்) ஆகக் கூடிய மொத்தப் பொறுப்பு ஒப்பந்த விலைக்கு ( ஒரு மில்லியன்) மட்டுப்படுத்தப்பட்டுள்ளது,* |

**(15 புள்ளிகள்)**

------- பதிப்புரிமை பெற்றது ------